**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,**

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 03 ஆம் நாள் செவ்வாய்கிழமை

**இ.ம.எண்.09/2026**

IN

**அசல் வழக்கு எண்.239/2011**

சொர்ணத்தாய் ...மனுதாரர்/3 ம் பிரதிவாதி

/எதிர்/

1. பொன்னுத்தாய்
2. கருப்பசாமி
3. தங்கம்
4. சாந்தி ....1 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/ வாதிகள்
5. மாரிமுத்து
6. முத்தையா ....5, 6 எதிர்மனுதாரர்கள்/ 1, 2 பிரதிவாதிகள்
7. நடராஜன்
8. முருகன்
9. முருகலட்சுமி
10. கோட்டைத்தாய்
11. பேச்சியம்மாள் ....7 முதல் 11 எதிர்மனுதாரர்கள்/ 4 முதல் 8 பிரதிவாதிகள்

இம்மனுவானது 19.02.2026 இன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.D.கோட்டூர்முருகன் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.ரவிசங்கர் அவர்கள் ஆஜராகியும், 5 முதல் 8 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் தோன்றாத்தரப்பினர்களாக உள்ள காரணத்தினால் இம்மனுவை பொறுத்து தோன்றாத்தரப்பினர்களாக கருதப்பட்டும், 9 முதல் 11 எதிர்மனுதாரர்கள்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.03.03 17:00:57 +0530

தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.வைரமுத்து அவர்கள் ஆஜராகியும், 9 முதல் 11 எதிர்மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவிற்கு No Counter என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ள நிலையிலும், மனு, 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரை மற்றும் அசல் வழக்கு கோப்பு, இருதரப்பு வாத உரையை கேட்டறிந்தும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## உத்தரவு

மனுதாரரால் இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 8 விதி 9–ன் கீழ், மனுதாரர் இத்துடன் காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் எதிர்வழக்குரையை மன்னித்து ஏற்றுக்கொள்ள உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்:–**

மனுதாரர் அசல் வழக்கில் 3ம் பிரதிவாதி என்றும், 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் பிரதான வழக்கை மனுதாரர் மீதும், 5 முதல் 11 எதிர்மனுதாரர்கள் மீதும் வழக்குரை தபசில் சொத்தை பொறுத்து பாகப்பிரிவினை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், பிரதான வழக்கில் மனுதாரரும் வழக்கறிஞர் மூலம் ஆஜராகி, பிரதான வழக்கிற்கு எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளதாகவும், இந்நிலையில் மனுதாரர் தரப்பில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய கடந்த 07.02.2026 அன்று இறுதி வாய்தா ஏற்பட்டுள்ளதாக தனது வழக்கறிஞரும் மனுதாரருக்கு விபரம் தெரிவித்திருந்தார் என்றும், மனுதாரரும் வழக்கறிஞர் அலுவலகம் சென்று கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய விபரம் கூறியதன் அடிப்படையில் கூடுதல் எதிர்வழக்குரையும், தனது வழக்கறிஞர் தயார் செய்திருந்தார் என்றும், இந்நிலையில் கடந்த 07.02.2026 அன்று ஏற்பட்ட மின்தடையின் காரணமாக தனது வழக்கறிஞர் தயார் செய்து வைத்திருந்த கூடுதல் எதிர்வழக்குரையை பிரிண்ட் எடுக்க இயலாமல் போய்விட்டது என்றும், அதனால் அன்றைய தினம் மனுதாரர் தரப்பில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்று கூறி இந்நீதிமன்றம் மனுதாரருக்கு அளித்திருந்த வாய்ப்பை

ALIMA M Digitally signed by ALIMA M
Date: 2026.03.03 17:01:08 +0530

முடித்துவிட்டதாக (Closed) கூறி உத்தரவிட்டுள்ளது என்றும், மேற்படி வழக்கில் மனுதாரர் தனது தரப்பு கூடுதல் எதிர்வழக்குரையுடன் ஆவணங்களை தாக்கல் செய்து தனது வழக்கை மேல்நடத்தி போனால் தான் மனுதாரரால் தனது கட்சியை இந்நீதிமன்றத்தில் நிரூபிக்க இயலும் என்றும், ஆகையால், மனுதாரர் இத்துடன் காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் எதிர்வழக்குரையை மன்னித்து ஏற்றுக்கொள்ள உத்தரவிடக்கோரி இம்மனு மனுதாரர் தரப்பில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>**4ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 1 முதல் 3 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்**</u> :–

மனுதாரரின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லக்கூடியதில்லை என்றும், இவ்வழக்கில் மனுதாரர் தரப்பு விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டு நிலுவையில் இருந்துவரும் நிலையில், மனுதாரர் தனது தரப்பு சாட்சியை இந்நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தாமல், இவ்வழக்கை காலம் கடத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் வேண்டுமென்றே கடந்த 07.02.2026 தேதியில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் இருந்துவிட்டு, தற்போது பின்னினைவாக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், மேலும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் சீர்திருத்த மனு தாக்கல் செய்திருந்ததில், 6ம் எதிர்மனுதாரரின் விலாசம் தவறாக இருப்பதாக கூறியதன் அடிப்படையில் தான் இந்த பிராது சீர்திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றும், அதன் அடிப்படையில் மட்டுமே கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வாய்தா ஏற்பட்டிருந்த நிலையில், அதனை விடுத்து ஏற்கனவே மனுதாரர் எதிர்வழக்குரையில் கூறியுள்ள தவறான சங்கதிகளை மாற்றம் செய்து இந்த கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்றும், மேலும், மனுதாரர் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய பல வாய்தாக்கள் பெற்றுவிட்டு, தற்போது மனுதாரர் வழக்கறிஞர் கூடுதல் எதிர்வழக்குரை தயார் செய்து, மின்தடை காரணமாக அதனை பிரிண்ட் எடுக்க முடியாமல் போய்விட்டது என்று கூறி மோசடியாக மனு தாக்கல் செய்து, இந்த வழக்கை காலம் கடத்தி வாதிகளை தபசில் சொத்தை அனுபவிக்க விடக்கூடாது என்று கெட்ட எண்ணத்தில் தற்போது மீண்டும் கூடுதல்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.03.03 17:01:15 +0530

எதிர்வழக்குரை தாக்கல் செய்து, அதனை இந்நீதிமன்றம் வாங்கி அங்கிகரித்து கொள்ள மனு தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், மேற்படியார்களின் செயல் சட்டவிரோதமானதாகும் என்றும், மேலும் மனுதாரர்களால் இந்த மனுவை ஏற்றுக்கொள்ள கூறியுள்ள காரணங்களும் ஏற்புடையதல்ல என்றும், மேலும், மனுதாரருக்கு இவ்வழக்கில் எவ்வித கட்சியும் கிடையாது என்றும், வேண்டுமென்றே இந்த வழக்கை காலம் கடத்தி வாதிகளை கஷ்ட–நஷ்டப்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இந்த மனு Vexatious ஆகவும், False ஆகவும், Frivilous ஆகவும், Ulterior Motive–வுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேலும், மனுதாரரின் இம்மனு அனுமதிக்கப்பட்டால் மனுதாரர்கள் அடையும் பலாபலன்களைவிட இந்த எதிர்மனுதாரர்கள் அடையும் கஷ்ட–நஷ்டங்களே மேலானதாக இருக்கும் என்றும், எனவே, மனுதாரரின் மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **<u>தீர்வுக்குரிய பிரச்சனை:-</u>**

இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

4) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு, 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை, அசல் வழக்கு கோப்பு மற்றும் இருதரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

5) மனுதாரரால் இம்மனுவானது மனுதாரர் இத்துடன் காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் எதிர்வழக்குரையை மன்னித்து ஏற்றுக்கொள்ள உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) அசல் வழக்கு கோப்பின் பரிசீலனையில் இருந்து, அசல் வழக்கானது வாதிகளால் பிரதிவாதிகளுக்கு எதிராக பாகப்பிரிவினை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டிருப்பதை இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.03.03 17:01:21 +0530

7) மேலும், இம்மனுவானது அசல் வழக்கில் வாதிகள் தரப்பு சாட்சி விசாரணை முடிவடைந்து, தற்பொழுது பி.வா.சா.1ன் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருப்பதையும் இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

8) மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவில் கடந்த 07.02.2026 அன்று ஏற்பட்ட மின்தடையின் காரணமாக தனது வழக்கறிஞர் தயார் செய்து வைத்திருந்த கூடுதல் எதிர்வழக்குரையை பிரிண்ட் எடுக்க இயலாமல் போய்விட்டது என்று கட்சி எடுக்கப்பட்டுள்ளது.

9) இம்மனுவின் 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் 6ம் எதிர்மனுதாரரின் விலாசம் தவறாக இருப்பதாக கூறியதன் அடிப்படையில் தான் இந்த பிராது சீர்திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றும், அதன் அடிப்படையில் மட்டுமே கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வாய்தா ஏற்பட்டிருந்த நிலையில், அதனை விடுத்து ஏற்கனவே மனுதாரர் எதிர்வழக்குரையில் கூறியுள்ள தவறான சங்கதிகளை மாற்றம் செய்து இந்த கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படியார்களின் செயல் சட்டவிரோதமானதாகும் என்று ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது.

10) இம்மனுவின் 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கட்சி எடுக்கப்பட்டதுபோல, அசல் வழக்கில் 6 முதல் 8 பிரதிவாதிகளின் முகவரி குறித்து திருத்தம் செய்ய வாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.8/2025 மனுவானது இந்நீதிமன்றத்தால் 22.01.2026 அன்று அனுமதிக்கப்பட்டதன் பேரில், கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய அசல் வழக்கானது ஒத்திவைக்கப்பட்டும், மனுதாரர்/3வது பிரதிவாதி தரப்பில் இதுதொடர்பாக கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்படாததால் இந்நீதிமன்றத்தால் 07.02.2026ல் முடித்து வைக்கப்பட்டுள்ளது.

11) மேலும், மனுதாரரால் இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் எதிர்வழக்குரையானது அசல் வழக்கில் திருத்தம் செய்யப்பட்ட 6 முதல் 8 பிரதிவாதிகளின் முகவரி தொடர்புடையது அல்ல என்பதையும்,

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.03.03 17:01:28 +0530

வேறு சங்கதிகளை குறிப்பிட்டு கூடுதல் எதிர்வழக்குரையானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதையும் இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

12) மனுதாரர்/3ம் பிரதிவாதி தரப்பில் இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் எதிர்வழக்குரையானது மனுதாரர்/3ம் பிரதிவாதியால் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையில் கூறியுள்ள தவறான சங்கதிகளை மாற்றம் செய்து தாக்கல் செய்யப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதை இவ்வழக்கின் இறுதியிலேயே இந்நீதிமன்றத்தால் முடிவு காண இயலும்.

13) இருப்பினும், மனுதாரர்/3ம் பிரதிவாதி தரப்பில் இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொள்வதால் அசல் வழக்கின் தன்மையில் எவ்வித மாற்றமும் ஏற்படப்போவதில்லை. மேலும், அசல் வழக்கின் சிறந்த நீதிமுறை தீர்மானிப்பிற்கும், தரப்பினர்களுக்கு இடையே மேலும் பல வழக்குகள் ஏற்படுவதை தவிர்ப்பதற்கும், மனுதாரர் தரப்பு கூடுதல் எதிர்வழக்குரை இந்நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளவேண்டியது அவசியமானது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

14) மேலும், மனுதாரர்/3ம் பிரதிவாதி தனது தரப்பு கூடுதல் எதிர்வழக்குரையை மிகவும் காலதாமதமாக இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பதால் 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/வாதிகளுக்கு ஏற்பட்ட கஷ்ட, நஷ்டத்தை கருத்தில் கொண்டு இம்மனுவானது நிபந்தனை செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டு இம்மனுவிற்கு இந்நீதிமன்றத்தால் முடிவு காணப்படுகிறது.

<u>15) இறுதியாக</u>

இம்மனுவானது ரூ.1000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) நிபந்தனை செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர் மேற்படி தொகையினை 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/வாதிகளுக்கு நேரடியாக 07.03.2026ம் தேதிக்குள் செலுத்த வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.03.03 17:01:35 +0530

இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 07.03.2026.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 03 ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.03.03 17:01:41 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

<u>**இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :-**</u>

**- இல்லை -**

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.03.03 17:01:47 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**மு.மா.உ. நீதிமன்றம்,**
**சங்கரன்கோவில்,**

I.A.No.09/2026
in
O.S.No.239/2011
**உத்தரவு (Draft / Fair)**

**நாள் : 03.03.2026**